இராமநாதபுரம் சமஸ்தானம் தேவஸ்தானம்
தலைமை அலுவலகம் இராமநாதபுரம்

ந.க.எண்: அ3 / 348 / 2020

நாள்: 23.05.2022

## டெண்டர்/ பொது ஏல அறிவிப்பு

இராமநாதபுரம் சமஸ்தானம் தேவஸ்தானம் இணைப்பு திருவாடானை அருள்மிகு ஆதிரெத்தினேஸ்வரர் திருக்கோயிலுக்குப் பாத்தியமான மேற்படி கிராமம் சர்வே எண். 291ல் 2.78ஏக்கர் அளவு உள்ள வாரச்சந்தையின் ஆயம் வசூல் செய்யும் உரிமை குத்தகையினை 1432-ம் பசலிக்கு மட்டும் (01.07.2022 முதல் 30.06.2023-ம் தேதி முடிய) 08.06.2022-ம் தேதி புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் திவான் மற்றும் நிர்வாகச் செயலாளர் அவர்களால் சிவகங்கை, இந்து சமய அறநிலையத்துறை, இணை ஆணையர் அவர்கள் முன்னிலையில் திருவாடானை அருள்மிகு ஆதிரெத்தினேஸ்வரர் திருக்கோயிலில் வைத்து, கீழ்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் பொது ஏலம் / டெண்டர் நடத்தப்படும்.

## நிபந்தனைகள்

1. ஏலத்தில் கலந்துகொள்பவர்கள் ரூ.10,00,000/- (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) டேவணித் தொகை செலுத்தவேண்டும். மேற்படி டேவணித்தொகையினை **"திவான் மற்றும் நிர்வாகச் செயலாளர், இராமநாதபுரம் சமஸ்தானம் தேவஸ்தானம்"** என்ற பெயரில் வங்கி வரைவோலையாக செலுத்தவேண்டும்.
2. டேவணித் தொகை ரூ.10,00,000/- (ரூபாய் பத்து லட்சம்) செலுத்தியவர்கள் அதே தொகையில் தனியே டெண்டர் கொடுக்கவும் அனுமதிக்கப்படுவார்கள்.
3. டெண்டர் கொடுக்க விரும்பம் உள்ள நபர்கள் ரூ.10,00,000/-க்கான சொத்து மதிப்பு சான்று (நடப்பு ஆண்டில் பெறப்பட்டது) சமர்ப்பிக்க வேண்டும். வங்கி வரைவோலை, சொத்து மதிப்பு சான்று ஆகியவற்றை திருவாடானையில் உள்ள இராமநாதபுரம் சமஸ்தானம் தேவஸ்தானம் சரக அலுவலகத்தில் காண்பித்து, டெண்டர் படிவம் மற்றும் நிபந்தனைகளுக்கு ரூ.1000/- செலுத்தி 01.06.2022 முதல் 07.06.2022 முடிய அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொண்டு தங்கள் கேள்வி தொகையினை டெண்டர் அட்டவணை படிவத்தில் பூர்த்தி செய்து மூடி முத்திரையிட்ட உறையில் "திவான் மற்றும் நிர்வாகச் செயலாளர், இராமநாதபுரம் சமஸ்தானம் தேவஸ்தானம்" என்ற முகவரியிட்டு 08.06.2022-ம் தேதி முற்பகல் 10.00 மணிக்குள் திருவாடானை, அருள்மிகு ஆதிரெத்தினேஸ்வரர் திருக்கோவிலில் வைக்கப்படும் டெண்டர் பெட்டியில் போட வேண்டும்.
4. டெண்டர் படிவத்தில் அடித்தல் திருத்தல் இல்லாமல் எழுதி கையொப்பம் இட வேண்டும்.
5. முதலில் பொது ஏலம் நடத்தப்படும். பொது ஏலத்தில் அதிகபட்ச தொகைக்கு கேள்வி கேட்டவுடன் அதற்குமேல் கேள்வி இல்லாத நிலையில் கேள்வி நிறுத்தப்பட்டு, வருகைபுரிந்த ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் டெண்டர் திறக்கப்படும் ஏலத்தொகை மற்றும் டெண்டர் தொகை இதில் எது அதிகபட்ச தொகையோ அதற்கு இலாகா அங்கீகாரத்திற்குட்பட்டு ஏலம் / டெண்டர் முடிவு செய்யப்படும்.
6. ஏலம் / டெண்டரில் வெற்றிபெற்றவர் டேவணித்தொகை தவிர மீதத்தொகையை உடனே செலுத்த வேண்டும். மற்றும் உயர்ந்த கேள்வி தொகையில் பிணை வைப்பு தொகையாக 5% , 2.3 % வருமான வரித்தொகை மற்றும் 2 % G.S.T. தொகை உடனே செலுத்த வேண்டும்.
7. ஏலம் / டெண்டரில் வெற்றி பெற்றவர் டேவணித்தொகை தவிர ஏனையோரின் டேவணித் தொகை திரும்ப வழங்கப்படும்.
8. வெற்றி பெற்ற ஏலதார் தம் சொந்தச் செலவில் உறுதிமொழிப் பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டும்.
9. பொது ஏலம் / டெண்டரில் கலந்துகொள்பவர்கள் இத்தேவஸ்தானத்திற்கு பாக்கி உள்ளவராக இருக்கக்கூடாது.
10. ஏலத்தில் வெற்றி பெற்றவர் தன்னிச்சையாக விலகிக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டாது. தவறும் பட்சத்தில் ஏற்படும் சகல இழப்பிற்கும் அவரே பொறுப்பாக்கப்படுவார்.
11. ஏலம்/டெண்டர் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை சட்டவிதிகளுக்குட்பட்டது.
12. ஏலம்/டெண்டரை காரணம் எதுவும் கூறாமல் ஒத்திவைக்கவோ ரத்துச்செய்யவோ ஏலம் நடத்தும் அதிகாரிக்கு முழு அதிகாரம் உண்டு.
13. கோவிட்-19 தொற்று பரவல் காரணமாக ஏலதாரர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் முககவசம் அணிந்து பொதுஏலத்தில் கலந்து கொள்ள வேண்டும் மற்றும் சமூக இடைவேளியை பின்பற்ற வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.
14. இதர நிபந்தனைகள் ஏல நேரத்தில் அறிவிக்கப்படும்.

23.5.22

திவான் மற்றும் நிர்வாகச் செயலாளர்.

23/05/2022. 23/5/2022 23/5/2022

த.பி.பா.

நகல் : இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சிவகங்கை

: உதவி தணிக்கை அலுவலர், இந்து சமய அறநிலையத்துறை, இராமநாதபுரம்

: ஆய்வாளர், இந்து சமய அறநிலையத்துறை, திருவாடானை.

: சரக பொறுப்பாளர்கள்
(திருவாடானை, இராமநாதபுரம், நயினார்கோவில், திருச்சுழி, திருஉத்தரகோசமங்கை)

: கட்டளைக் கண்காணிப்பாளர், மதுரை.

(திருக்கோவில் மற்றும் சரக அலுவலக விளம்பர பலகையில் ஒட்டி விளம்பரம் செய்ய பணிக்கப்படுகிறது)